FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348089

1. District : Krishnagiri PS: VG AC Year: 2026 FIR No.: 12/AC/2026 Date: 01.09.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(b) and
(ii) Act சட்டம்: Act, 1988 as amended in 2018. Sections பிரிவுகள்: 12 r/w 7(b)
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 20.08.2026 at about 15.50 hrs.
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 23.08.2026 at about 11.00 hrs.
Time Period : Time from : Time to : 27.08.2026 at about 15.40 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை 01.09.2026 at about 11.05 hrs

(b) Information Received at PS. Date : 01.09.2026 at 19.00 hrs. Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer Typed.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: About 55 KM West.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : Tamilnadu Pollution Control Board, Hosur.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : C. Pradhap (b) Father's/ Husband's Name : Chinnasamy.
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : Age-41 (d) Nationality : Indian. (e) Passport No. : -
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : - Place of Issue : -
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Business (g) Address : D.No. 28/37B, Hospital Colony, Mettur Dam, Mettur, Salem District.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) Tr. V. Purushothaman, District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur.
2) Tr. Sivakumar, TNPCB Consultant, Salem.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted:

Separate Sheets enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .....காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

C. Prabhu 1/9/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

01.09.26

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

01.09.2026 at 22.10 hrs.

Name: பெயர் A.T. Jai Kumar,
Rank: நிலை .....No. எண் .....
Deputy Superintendent of Police,
VAC, Krishnagiri.

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 12/AC/2026 u/s 7(b) and 12 r/w 7(b) of the Prevention of Corruption Act, 1988, as amended in 2018, வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண். 12-ன் தொடர்ச்சி.

இன்று 01.09.2026-ம் தேதி 19.00 மணிக்குக் காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் இருந்தபோது, ஊ.பிரதாப், த/பெ.சின்னசாமி, கதவு.எண்.28/37B, மருத்துவமனை காலனி, மேட்டூர் அணை, மேட்டூர், சேலம் மாவட்டம், என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர்: C.பிரதாப், த/பெ.சின்னசாமி, கதவு.எண்.28/37B, மருத்துவமனை காலனி, மேட்டூர் அணை, மேட்டூர், சேலம் மாவட்டம். பெறுநர்: உயர்திரு. காவல் துணை கண்காணிப்பாளர், லஞ்ச ஒழிப்புத் துறை, கிருஷ்ணகிரி மாவட்டம். ஐயா, நான் சேலம் மாவட்டம் மேட்டூரில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கிரஷர் தொழில் செய்து வருகிறேன். நான் மேட்டூரில் உள்ள சக்தி விநாயகா புளூ மெட்டல்ஸ் நிறுவனத்தில் பங்குதாராராக உள்ளேன். நான், ஸ்ரீ கண்ணா சூப்பர் மார்க்கெட் என்ற பெயரில் மேட்டூர், ராம்நகரிலும் மற்றும் கொளத்தூரில் ஸ்ரீ கண்ணா ஹைப்பர் மார்க்கெட் என்ற பெயரில் டிபார்ட்மெண்டல் ஸ்டோர் நடத்தி வருகிறேன். கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டம், சிவம்பட்டி கிராமத்தில் சர்வே எண். 135/1A-ல் 1 ஏக்கர் 26 சென்ட் நிலம் தம்பி C.பிரதீப், சர்வே எண். 135/1B-ல் 1 ஏக்கர் நிலம் தந்தை R.சின்னசாமி, சர்வே எண். 135/1C-ல் 21 சென்ட் நிலம் மாமனார் G.சுப்பிரமணி, மற்றும் சர்வே எண். 135/1D-ல் 21 சென்ட் நிலம் பெரியப்பா திரு.விஜயன் மகன் ஜெகதீசன், ஆகியோர்களின் பெயரில் உள்ளது. நான் மேற்படி நிலத்தில் எனது தம்பி C.பிரதீப் பெயரில் 2019-ம ஆண்டு முதல் ஸ்ரீ கண்ணா புளூ மெட்டல்ஸ் என்ற பெயரில் கிரஷர் நடத்தி வந்தேன். அதில், M-சான்ட் மற்றும் P-சான்ட் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. அதற்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், ஓசூர் அவர்கள் Proceedings No.F.2699HSR/OS/DEE/TNPCB/HSR/W/2023, நாள்: 17.03.2023-ன்படி Consent Order No. 2304137568009 மற்றும் Proceedings No.F.2699HSR/OS/DEE/TNPCB/HSR/A/2023, நாள்: 17.03.2023-ன்படி Consent Order No. 2304237568009, M/s. Sri Kanna Blue Metals, நடத்த consent to

operate 19.03.2023-ம் தேதி வழங்கினார். அதன் பின்னர், 24.10.2024-ம் தேதி முதல் எனது நண்பர் திரு.M.லாரன்ஸ், த/பெ.மரியண்ணன், 2/116, மாசிலபாளையம் கிராமம், மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம், பெயரில் நடத்தி வருகிறேன். அதற்கான GST Registration No. 33BEHPL0944Q1Z5. ஸ்ரீ கண்ணா புளூ மெட்டல்ஸ் நிறுவனத்தின் M-சான்ட் மற்றும் P-சான்ட உற்பத்தியுடன் புளூ மெட்டல் ஜல்லி 2000 மெட்ரிக் டன் உற்பத்தி செய்வதற்காக, CTE for expansion (consent for establishment for expansion-I) வேண்டி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தில் 20.06.2026-ம் தேதி எனது தம்பி C.பிரதீப் பெயரில் ஓசூர் Bio Safe Solutionss கன்சல்டன்ட் திரு.ஸ்ரீனிவாசன் மூலம் ஆன்லைனில் விண்ணப்பித்தேன். எனது மொபைல் நம்பர் 9842610248 மற்றும் இ-மெயில் id: pradhap.kanna@gmail.com-ஐ தொழிலுக்காக பயன்படுத்தி வருகிறேன். திரு.ஸ்ரீனிவாசன், அவர்கள் என்னை DEE திரு.புருஷோத்தமன் அவர்களிடம் அழைத்து சென்று அறிமுகம் செய்வதாக கூறி வரச் சொன்னதன்பேரில், நான் 20.08.2026-ம் தேதி ஓசூர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் அலுவலகத்திற்கு மாலை சுமார் 03.50 மணிக்குச் சென்றேன், நான் மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்திற்குள் செல்லும் போது செக்யூரிட்டி ஒரு பதிவேட்டில் என்னுடைய பெயர், நிறுவனத்தின் பெயர், பார்க்கச் சென்ற அலுவலர்களின் விவரம், செல்போன் எண் மற்றும் சில விவரங்களை பதிவு செய்யச் சொன்னார். நானும், அந்த பதிவேட்டில் என்னுடைய விவரங்களை பதிவு செய்தேன். தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்தில் திரு.ஸ்ரீனிவாசன், எனக்காக காத்துகொண்டிருந்தார், நான் சென்றதும், திரு.ஸ்ரீனிவாசன் என்னை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திரு.புருஷோத்தமன் அவர்களின் அறைக்கு அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்தார். திரு.புருஷோத்தமன் என்னைப் பற்றியும், நிறுவனம் பற்றியும் விவரங்களை கேட்டுத் தெரிந்துகொண்டு, பின்னர் நான் மேட்டூர் என்று சொன்னதும், உங்களுக்கு மேட்டூரிலும் கிரஷர் உள்ளதா என்று கேட்டார். ஆமாம், உள்ளது என்று கூறினேன். அப்படியென்றால், உங்களுக்கு TNPCB கன்சல்டன்ட் சிவக்குமார் தெரியுமா என்று கேட்டார். நான் தெரியும் என்று கூறினேன். திரு.புருஷோத்தமன் அவர்கள் CTE வழங்க தனக்கு தனியாக பணம் ரூ.15,00,000/- தர வேண்டும் என்று கேட்டார். சார் என்னால் அவ்வளவு பணம் தர இயலாது என்று சொன்னதற்கு, அவர் கொஞ்சம் வேலையாக இருக்கேன், பின்னர் தொடர்புகொள்வதாக கூறி என்னை மட்டும் வெளியே அனுப்பிவிட்டார். அன்று மாலை எனது கன்சல்டன்ட் திரு.ஸ்ரீனிவாசன், 9443465445 என்ற எண்ணிலிருந்து

எனக்கு போன் செய்து, கன்சல்டன்ட் fees மட்டும் என்னை வாங்கிகொள்ளும்படியும் மற்றபடி பார்மாலிடிஸ் DEE உங்களிடம் பேசிக்கொள்வதாக தெரிவித்தார். மேலும், மறுநாள் 21.08.2026-ம் தேதி AE அவர்கள் விசிட் வருகிறார் அவருடைய மொபைல் எண்னை உங்களுக்கு வாட்ஸ்அப்-ல் அனுப்பிவிடுகிறேன் என்று கூறி, அன்று மாலை சுமார் 05.10 மணிக்கு 9443465445 என்ற எண்ணிலிருந்து Mr.Kriba AE TNPCB, Hosur, Mob: 9123522740 என மெசேஜ் அனுப்பினார். 21.08.2026-ம் தேதி சைட் விசிட் வருவதாகவும், அவரை தொடர்பு கொண்டு பிளாண்டிற்கு அழைத்து செல்லும்படி கூறினார். அவர் சொன்னது போலவே 21.08.2026-ம் தேதி மத்தூரில் உள்ள எனது ஸ்ரீ கண்ணா புளூ மெட்டல்ஸ் நிறுவனத்திற்கு சைட் விசிட்டிற்கு வந்து சென்றார். பின்னர், 22.08.2026-ம் தேதி சனிக்கிழமை மாலை சுமார் 06.40 மணிக்கு 9976488188 என்ற எண்ணிலிருந்து சேலத்தை சேர்ந்த கன்சல்டன்ட் திரு.சிவக்குமார், என்னுடைய 9994868247 எண்ணில் தொடர்பு கொண்டு, ஓசூர் DEE புருஷோத்தமன் என்னை தொடர்பு கொள்ள சொன்னதாக கூறி என்னுடைய தம்பி விண்ணப்பம் சம்பந்தமாக பேசினார். அப்போது, என்னிடம் அவர் DEE அப்ளிகேஷன் பார்மாலிடிஸ் சம்பந்தமாக பேச சொன்னார் என்று சொல்லி, அவர் பின்னர் வாட்ஸ்அப் காலில் அழைப்பதாக கூறி போனை கட் செய்துவிட்டார். பின்னர், 23.08.2026-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை சுமார் 11.00 மணிக்கு திரு.சிவக்குமார் அவரது செல்போன் எண்ணிலிருந்து வாட்ஸ்அப் காலில் என்னை தொடர்பு கொண்டு பேசினார். அப்போது, உங்க ஸ்ரீ கண்ணா புளூ மெட்டல்ஸ் நிறுவனத்திற்கு CTE (Consent to Establish) வழங்க ரூ.15,00,000/- DEE திரு.புருஷோத்தமன் கேட்டதாகவும், 25.08.2026-ம் தேதி மாலை 04.00 மணிக்கு DEE திரு.புருஷோத்தமன் அவர்களை அலுவலகத்திற்கு சென்று சந்திக்குமாறு DEE சொன்னதாக தெரிவித்தார். நான் அவரிடம் ரூ.15,00,000/- தர முடியாது, என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று கூறியதற்கு, நீங்கள் அவரிடம் கொஞ்சம் குறைக்க சொல்லுங்கள், அவர் பணத்தை குறைத்து கொள்வார் என்று சொன்னார். சொந்த வேலை காரணமாக 25.08.2026-தேதி ஓசூர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்திற்கு என்னால் செல்ல இயலவில்லை. பின்னர், நான் 26.08.2026-ம் தேதி காலை 09.00 மணிக்கு திரு.சிவக்குமார் அவர்களை செல்போனில் தொடர்பு கொண்டு, என்னால் 25.08.2026-ம் தேதி DEE திரு.புருஷோத்தமன் அவர்களை அலுவலகம் சென்று பார்க்க முடியவில்லை, நான் 27.08.2026-ம் தேதி ஓசூர் அலுவலகத்திற்கு சென்று DEE திரு.புருஷோத்தமன் அவர்களை பார்க்க

போகிறேன், நீங்க என்ன டைம் என்று கேட்டு சொல்லுங்கள், நான் போய் பார்க்கிறேன் என்று சொன்னேன். அதற்கு திரு.சிவக்குமார் காலை 10.00 மணிக்கு போய் பார்த்துருங்க, அவர் நேற்றே போனில் நீங்க வந்து பார்க்கவில்லை என்று கேட்டு வருத்தப்பட்டார் என்று சொன்னார். பின்னர், நீங்க 11.00-11.30 மணிக்குள் போய் பாருங்கள் நான் சொல்விடுகிறேன் என்று சொன்னார். மேலும், அவர் புரோமோஷன்ல இருக்காரு அடுத்து வேலூர் JC ஆகிவிடுவார், அதனால பல விஷயங்களுக்கு தேவைப்படுவார், அவரை கெட்டியாக பிடித்துக்கொள்ளுங்கள், அவர் MS-ஆகவும் அதாவது மெம்பர் செகரட்டரி ஆகவும் வாய்ப்பிருக்கு, அதனால போய் பாருங்கள் என்று சொன்னார். நான் 27.08.2026-ம் தேதி DEE திரு.புருஷோத்தமன் அவர்களை பார்க்க ஒசூரில் இருந்த போது மதியம் சுமார் 01.15 மணிக்கு திரு.சிவக்குமார் அவருடைய செல்போன் எண்ணிலிருந்து எனக்கு போன் செய்து, எங்க இருக்கீங்க போயிட்டீங்களானு கேட்டார். நான், சூளகிரி தாண்டி போய்க்கிட்டு இருக்கிறதா சொன்னேன், அதற்கு சிவக்குமார் DEE நீங்க ஏன் இன்னும் வரலன்னு போன் பண்ணி கேக்குறாரு, சீக்கிரம் போய் பாருங்க என்று சொன்னார். ஒசூரில் மேகதாது பிரச்சனை சம்பந்தமாக டிராபிக் அதிமாக இருப்பதால் மாலை சுமார் 03.25 மணிக்கு ஒசூர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்திற்கு சென்று சுமார் 03.40 மணியளவில் DEE திரு.புருஷோத்தமன் அவர்களை அவரது அறையில் சந்தித்து, CTE சம்பந்தமாக கேட்டதற்கு, சிவக்குமார் அமௌண்ட் எவ்வளவுன்னு சொன்னாரா என்று கேட்டார். அதற்கு நான், நீங்க 15 லட்சம் கேட்டதா சிவக்குமார் சார் சொன்னாரு, என்னால அவ்வளவு பணம் தர முடியாது என்று சொன்னதுக்கு நீங்க 15 லட்சம் எதிர்பார்க்கிறதா சொன்னாரு. கொஞ்சம் குறைச்சு சொல்லுங்க சார் என்று கேட்டேன். அதற்கு, திரு.புருஷோத்தமன் BP116 ஏர் சர்வே பிரேக் பண்ணி போட்ருக்கேன், TNPCB போட்டுடாங்கன்னா அவ்வளவு சீக்கிரம் வராது, CTE ஒரு ஆறு மாசம் இழுத்துரும், நிறைய issues எல்லாம் இருக்கு அந்த் ரிஸ்க் எல்லாம் நான் எடுத்துதான் பண்ணி தர்றேன், அதற்கு அவர் சரி, பார்த்து ஏதாவது ஒன்னு, ரெண்டு குறைச்சுக்கோங்க, வேற என்ன என்று சொன்னார். சார், இதை ஒன்னு பார்த்து சொல்லுங்க சார், நானும் முடிக்கணும்னுதான் சார் வந்திருக்கிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் சரி, ரெண்டு... இதை குறைச்சுக்கோங்க பண்ணி கொடுத்துடலாம் ஒன்னும் பிரச்சனை இல்லை என்று சொன்னார். நான் சார், ஒரு 10 லட்சம் ரூபாய் ரவுண்ட்அப் பண்ணிக் குடுங்க சார் என்று சொன்னேன். அதற்கு அவர் ஆ

பண்ணிடலாம் 13 வேண்டாம், தனியா இருக்குது என்று சொன்னார். நான் சார், நீங்க நினைச்சீங்கன்னா பண்ணலாம் சார் என்று சொன்னேன். பின்னர், ரவுண்ட்அப் 10 லட்சம் பண்ணி குடுங்க சார் என்று கேட்டேன். பின்னர், சரி 10 லட்சம் கொடுங்கள் என்று சொன்னார். பாஸ், இனிமே வந்து நீங்க சிவக்குமாரோட முடிச்சுக்கோங்க என்று சொன்னார். மேலும், அதைப்பற்றி பேச வேண்டாம்ன்றேன் that's all over completed matter என்று சொல்லிவிட்டார். பின்னர், கண்டிப்பா நெக்ஸ்ட்வீக் புதன், வியாழனுக்குள்ளார உங்களுக்கு கன்சென்ட் ஆர்டர் வந்துவிடும் என்று சொன்னார். பின்னர், திரு.புருஷோத்தமன் என்னிடம் பணம் எப்போ கொடுப்பீங்க என்று கேட்டார். நான் 02.09.2026-ம் தேதி புதன்கிழமை 3 லட்சம் கொடுப்பதாக தெரிவித்தேன். அப்போது, அவர் மீதி பணத்தை எப்போ தருவீங்க what is the maximum time என்று கேட்டார். அதற்கு, எனக்கு 10-ம் தேதி சீட்டு சார், செப்டம்பர் 15-ம் தேதி மீதி பேலன்ஸ் 7 லட்சம் கொடுத்துவிடுவதாக சொன்னேன். நான் மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்திற்குள் செல்லும் போது அங்கிருந்த பதிவேட்டில் என்னுடைய பெயர், நிறுவனத்தின் பெயர், பார்க்கச் சென்ற அலுவலர்களின் விவரம், செல்போன் எண்னை பதிவு செய்தேன். 01.09.2026-ம் தேதி காலை சுமார் 11.05 மணிக்கு ஸ்ரீனிவாசன் 9443465445 என்ற எண்ணிலிருந்து என்னை தொடர்பு கொண்டு உங்களுக்கு CTE கிடைத்துவிட்டது. DEE அவர்கள் உங்களுக்கு CTE கொடுத்துவிட்டார் என்று தெரிவித்து, அதன் நகலை வாட்ஸ்அப்-ல் அனுப்பவதாக கூறி அனுப்பினார். அதன்படி, consent for establishment FOR EXPANSION-I திரு.V.புருஷோத்தமன், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், ஓசூர் அவர்களால் Proceedings No.F.2699HSR/OS/DEE/TNPCB/HSR/W/2026, நாள்: 31.08.2026-ன்படி Consent Order No. 2606176909906 மற்றும் Proceedings No.F.2699HSR/OS/DEE/TNPCB/ HSR/A/2026, நாள்: 31.08.2026-ன்படி Consent Order No. 2606276909906, வழங்கப்பட்டிருந்தது. அதன்பின்னர், நான் திரு.சிவக்குமார் அவர்களை அவரது செல்போன் எண்ணான 9976488188 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு திரு.ஸ்ரீனிவாசன் போன் பண்ணி Order போட்ட விவரத்தை சொன்னேன். அப்போது, திரு.சிவக்குமார் நீங்க DEE பார்த்த அன்றைக்கே CTE போட்டுவிட்டார் என்று கூறினார். மேலும், நீங்க 3 லட்சம் நாளைக்கு 02.09.2026-ம் தேதியும், மீதி 7 லட்சம் 15.09.2026-ம் தேதி நீங்க கொடுக்குறதா DEE சொன்னதாக தெரிவித்தார். பின்னர், நீங்க நாளைக்கு

இதுக்காக வரவேண்டாம், யார்கிட்டையாவது குடுத்துவிடுங்க என்று சொன்னார். நான், 02.09.2026-ம் தேதி காலையில் போன் செய்வதாக தெரிவித்தேன். நான் ஓசூர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்தில் 27.08.2026-ம் தேதி, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திரு.V.புருஷோத்தமன் அவர்களை அலுவலகத்தில் நேரில் சந்தித்து ஸ்ரீ கண்ணா புளூ மெட்டல்ஸ் நிறுவனத்தில் Consent for Establishment for Expansion, சம்பந்தமாக கேட்ட போது அவர் என்னிடம் CTE வழங்க லஞ்சம் கேட்டது, 22.08.2026-ம் தேதி மாலை சுமார் 06.40 மணிக்கு திரு.சிவக்குமார் 9976488188 என்ற எண்ணிலிருந்து எனது செல் போன் 9994868247 எண்ணில் தொடர்பு கொண்டு பேசியதையும், நான் 01.09.2026-ம் தேதி காலை 11.05 மணிக்கு திரு.சிவக்குமார் அவர்களை தொடர்பு கொண்ட போது பேசியதையும், எனது மொபைலில் பதிவு செய்து வைத்துள்ளேன். எனக்கு, ஓசூர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திரு.V.புருஷோத்தமன் அவர்கள் என்னிடம் ரூ.10,00,000/- லட்சமாக கேட்ட பணத்தை கொடுத்து எனது நிறுவனத்திற்கு CTE பெற விருப்பமில்லை. DEE திரு.V.புருஷோத்தமன் அவர்கள் லஞ்சமாக கேட்ட முதல் தவனை பணம் ரூ.3,00,000/-த்துடன் சேலத்தை சேர்ந்த கன்சல்டன்ட் திரு.சிவக்குமார் அவர்களை 02.09.2026-ம் தேதி சந்திக்க உள்ளேன். எனவே, என்னிடம் லஞ்சம் கேட்ட ஓசூர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திரு.V.புருஷோத்தமன் மற்றும் TNPCB கன்சல்டன்ட் திரு.சிவக்குமார் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/-xxxx (C.Pradhap), 01.09.2026. Madam, I received the computer-typed complaint on 01.09.2026 at 19.00hrs. The three voice files produced by the informant from his cell phone vivo Y28s 5G (Twinkling Purple), were downloaded to the office computer. I heard the voice files carefully, and they clearly make out a prima facie offence against Tr.V.Purushothaman, District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, and Tr.Sivakumar, TNPCB Consultant, Salem. Hence, I registered a case in Krishnagiri V&AC Cr.No.12/AC/2026, under Sections 7(b) and 12 read with 7(b) of the Prevention of Corruption Act, 1988, as amended in 2018, on 01.09.2026 at 20.30hrs, after making a confidential verification of the general reputation of the accused, which was learnt to be not good. The oral concurrence of the

Superintendent of Police, Western Range, was also obtained. Thereafter, the above voice files were copied from the computer onto a DVD. Sd/-xxxx (A.T.Jai Kumar), 01.09.2026, Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, Krishnagiri.

The original complaint and the original FIR, along with the above DVD and the certificate under Section 63(4) of the BSA, 2023, were sent to the Hon'ble Court of the Principal District and Sessions Judge, Krishnagiri, and the remaining copies were sent to the officers concerned.

01.09.26

Deputy Superintendent of Police
Vigilance and Anti-Corruption
Krishnagiri.